# தமிழாய்வுச் சங்கமம்

# TAMILAIVU SANGAMAM

**Special Issue** **September - 2018**








## தமிழ் இலக்கியங்களில் பொருளியல் சிந்தனைகள்








வட்டார மக்களின் சமூக அதிகாரமாக்கல் அறக்கட்டளை

**SOCIAL EMPOWERMENT OF LOCAL PEOPLE TRUST**

www.selptrust.org

ISSN 2320-3412

| | | |
|---|---|---|
| 50 | **நாகஜோதி. பா**<br>புறநானூறு தரும் பொருளாதாரப் பாடம் | 129 |
| 51 | **நித்யா. ரா**<br>அகநானூற்றில் வாணிகம் | 132 |
| 52 | **நிவேதிதா. ப**<br>பாண்டியன் பரிசில் பொருளியல் சிக்கல்கள் | 135 |
| 53 | **பத்ம பிரியா. மா**<br>'மனிதவளத்தால் பொருளாதாரமேம்பாடு' அறநூல்களை முன்னெடுத்து….. | 137 |
| 54 | **பத்மப்பிரியா. து**<br>பாவேந்தர் பாடல்களில் பொதுவுடைமை | 140 |
| 55 | **பரிமளா. தி**<br>அகநானூற்றில் பொருள்தேடலும் இல்லறக் கடமைகளும் | 142 |
| 56 | **பாக்கியலெட்சுமி. ஏ**<br>தேநீர் நாவல் நவின்றிடும் தேயிலைத் தோட்டத்தொழிலாளர்களின் பொருளியல் பதிவுகள் | 145 |
| 57 | **பாண்டியம்மாள். செ**<br>பொருளின்றிச் சிறக்காது இல்லறம் | 147 |
| 58 | **பாரதி. க**<br>அம்பை சிறுகதை வழி பொருளாதாரச் சிக்கல்கள் | 150 |
| 59 | **பாலாஜி. கோ**<br>வணிகத்தில் சங்க மகளிரின் பங்களிப்பு | 153 |
| 60 | **பிரதீபா. ந**<br>தமிழ் இலக்கியங்கள் சுட்டும் வறுமைநிலை | 156 |
| 61 | **பிரிகிருஷ்ணவேணி. பி**<br>அகநானூற்றில் பொருளியல் சிந்தனை | 158 |
| 62 | **பிரின்ஸ். ஜோ**<br>பழந்தமிழகத்தின் கடல்வாணிக வழிகள் | 160 |
| 63 | **பூங்குழலி. இரா**<br>பாரதியின் பொருளியல் கனவுகள் | 163 |
| 64 | **பொன்னி. பா**<br>சங்ககால அரசர்களின் பொருளியல் சிந்தனைகள் | 166 |
| 65 | **மணிமேகலா. ம**<br>சங்ககால மக்களின் பொருளீட்டல் | 169 |
| 66 | **மல்லிகா. தி**<br>'உழவே தலை' | 172 |
| 67 | **மாரியம்மாள் பிரதீபா. க**<br>பதிற்றுப்பத்தில் பொருளியல் சிந்தனை | 174 |
| 68 | **முத்தமிழ்ச் செல்வன். சோ**<br>சங்க இலக்கியங்கள் சுட்டும் பொருள் கோட்பாடு | 177 |
| 69 | **முத்துராஜன். ஆர்**<br>முல்லை நில மக்களின் பொருளியல் வாழ்க்கை | 180 |
| 70 | **முத்துவேல். ச**<br>அகநானூற்றில் வாணிகம் | 182 |
| 71 | **முருகன். வெ**<br>திருக்குறள் உணர்த்தும் தமிழர்களின் பொருளியற் சிந்தனை | 185 |
| 72 | **மெர்சி ஏஞ்சலா**<br>ஏலாதியில் பொருளியல் சிந்தனைகள் | 188 |
| 73 | **மேகலா. பி**<br>மூன்றாம் உலகப் போர் புதினத்தில் விவசாய மக்களின் பொருளாதார நிலை | 191 |
| 74 | **ராஜமரகதம். அ**<br>பெருங்கதையில் தொழிலாளர்கள் | 194 |
| 75 | **லதா. க**<br>சிலம்பில் தொழில்கள் | 197 |
| 76 | **லயோலா சூலியட் மேரி. பா**<br>பொருளே பிரதானம் | 199 |

ISSN 2320-3412

# சிலம்பில் தொழில்கள்

**முனைவர் க.லதா**
*இணைப்பேராசிரியர்*
*தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, மதுரை*

வான்பொருள் தந்த வள்ளுவம் பொருளின் தன்மையை எடுத்துக்கூறும் போது மனிதரின் மதிப்புப் பொருளில் தெரியும் என்பார். ஏனெனில் ஒரு பொருட்டாக மதிக்க இயலாத குணங்களை உடையவரையும் மதிக்கச் செய்யும் தன்மை வாய்ந்தது பொருள்.

**செல்வத்துப் பயன்**

முத்தமிழையும் முக்கனி போல ஒருங்கே தரும் சிலப்பதிகாரத்தில் பொருள், பொருளீட்டல், தொழில்முறை, செல்வநிலை குறித்தச் செய்திகள் பரவலாகக் காணக்கிடக்கின்றன.

**"குலந்தரு வான் பொருட் குன்றந் தொலைத்த**
**இலம்பாடு நாணுத் தருமெனக்கு."**
**(கனாத்திறம். 70-71)**

என்று கோவலன், கண்ணகியிடம் தன் வருத்தத்தைப் பகிரும் போது மீண்டும் வான்பொருள் குன்றம் தேடவேண்டும் என்ற அவனுடைய நோக்கம் வெளிப்படுகிறது. அதன்பொருட்டே இருவரும் மதுரையை நோக்கிப் பயணிக்கின்றனர்.

பொருளை அறவழியில் மட்டுமே ஈட்டுக என்றும் வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு."**
**(கு.எ. 212)**

ஏனப் பொருளீட்டலின் நோக்கத்தை வலியுறுத்துகிறார் அவர். வள்ளுவத்துக்கும் முன்னோடியாக **'செல்வத்துப் பயனே ஈதல்'** என்கிறார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார(புறம். 139) எங்ஙனம் நோக்கினும் பொருள் இன்றியமையாதது என்பதையே இவை உணர்த்துகின்றன.

**செல்வவளம்**

காப்பியத் தொடக்கத்திலேயே புகார் நகரத்தின் செல்வவளம் பேசப்படுகிறது.

**"பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய**
**பொதுவறு சிறப்பின் புகார்."**
**(மங்கல. 15-16)**

என்னும் போது, புகார் நகரத்தை விட்டு எக்காரணத்திற்காகவும் பிற நகரங்களுக்குப் புலம்பெயர்ந்து அறியாத பழங்குடி மக்கள் வாழ்ந்த நகரம் என்று பாடுகிறார் இளங்கோ. இது எப்படி சாத்தியமாகும்? சாத்தியமே என்கிறது வள்ளுவம்.

**"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
**நாட வளந்தரும் நாடு."**
**(கு.எ. 739)**

இக்குறளுக்கு இலக்கணமாகப் புகார்நகரம் விளங்கியுள்ளது. இது தொல்தமிழகத்தின் செல்வ வளத்தையும், அவர்தம் பொருளீட்டும் சிறப்பையும் ஒருங்கே உணர்த்துகிறது. தொடர்ந்து புகாரின் பெருமையைப்,

**'போகநீள் புகழ் மன்னும் புகார்'** எனவாழ்த்தும் இளங்கோவடிகள், கண்ணகியின் தந்தையை,

**"மாகவான் நிகர் வண்கை மாநாய்கன்"**

என்று அறிமுகம் செய்கிறார். மேகம்போல் கைம்மாறு கருதாமல் ஒருவன் வாரிவழங்க வேண்டுமெனில் அவனிடம் அழியாப் பெருஞ்செல்வம் இருக்க வேண்டும். அப்பெருஞ்செல்வம் கொண்டு விளங்கியவன் என மாநாய்கனைக் காட்டும் ஆசிரியர்,

**"பெருநில முழுதாளும் பெருமகன் தலைவைத்த**
**ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு**
**செல்வத்தான்**
**வருநிதி பிறர்க்காத்து மாசாத்துவானென்பான்**
**இருநிதிக்கிழவன்..........."**

என மாசாத்துவனை அறிமுகம் செய்கிறார். சிலம்புக்கதை நாயகி கண்ணகியையும் நாயகன் கோவலனையும் அறியும்முன் அவ்விருவரின் தந்தையரையும், அவர்களின் செல்வ நிலையையும் இளங்கோ வாசகர்க்குப் புலப்படுத்துகிறார்.

**வணிகவளம்**

வணிகர் மட்டுமன்றி, **'கடலோடிகள்'** என (அடியார்க்கு நல்லார் உரை) அழைக்கப்பட்ட பரதவர் பெரும்பொருள் ஈட்டி வாழ்ந்தனர் என்பதையும் இளங்கோ கீழ்க்கண்ட அடிகளில் பதிவு செய்துள்ளார்.

**"உரைசால் சிறப்பின் அரைச விழை திருவின்**
**பரதர்மலிந்த பயங்கொழு மாநகர்**
**முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்**
**வழங்கத்தவாஅ வளத்ததாகி**
**அரும்பொருள் தருஉம் விருந்தின் தேஎம்**
**ஒருங்கு தொக்கன்ன உடைப்பெரும் பண்டம்**
**கலத்திலும் காலினும் தருவனர் ஈட்ட"**
**(மனையறம், 1-7)**

வானளாவும் செல்வம் படைத்த அரசர்களும் விழையும் செல்வத்தைப் பெற்றிருந்தனர் பரதவப் பெருமக்கள் என்ற செய்தி இங்கு குறிக்கத்தக்கது.